(ஏழாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

இல. 451.]

# பாராளுமன்றம்

## ஒழுங்குப் பத்திரம்

### 2015 ஏப்பிறல் 21, செவ்வாய்க்கிழமை, மு.ப. 9.30 மணிக்கு

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

4399/ '13

1.

கௌரவ புத்திக பதிரண,— மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) கண்டி மாவட்ட வன உத்தியோகத்தர் பிரிவு அலுவலகங்களினால் நிருவகிக்கப்படும் காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவுக்குச் சொந்தமான காணிகளின் அளவு யாதென்பதையும்;

(ii) குறித்த காணிகளில் வன பாதுகாப்புத் திணைக்களத்தினால் பைனஸ் மற்றும் ஏனைய வனப் பயிர்ச்செய்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளமையை அறிவாரா என்பதையும்;

(iii) அவ்வாறு பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ள காணிகளின் அளவு யாதென்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) (i) வன பாதுகாப்புத் திணைக்களத்தினால் பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ள காணிகளை தனிநபர்கள் அனுமதியின்றி கைப்பற்றி உள்ளார்கள் என்பதையும்;

(ii) குறித்த காணிகளில் ஒரு பகுதியை அரசாங்கம் பொது மக்களுக்கு வழங்கியுள்ளதையும்

அவர் அறிவாரா?

(இ) (i) மேலே (அ) (iii) இல் குறிப்பிடப்பட்டுள்ள வனப் பிரதேசத்தில், தனிநபர்கள் அனுமதியின்றிக் குடியமர்ந்துள்ள காணியின் அளவு மற்றும் அரசாங்கத்தினால் பொது மக்களுக்கு வழங்கப்பட்டுள்ள காணியின் அளவு வெவ்வேறாக யாதென்பதையும்;

(ii) ஒதுக்கு வனப் பிரதேசங்கள், மேலே கூறப்பட்டுள்ளவாறு மனிதனின் தேவைக்காக பயன்படுத்தப்படுவதால் நீரேந்து பிரதேசங்கள் அழிந்துவிடுமென்பதை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(iii) ஆமெனில், இந்த நிலைமையைத் தடுப்பதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

4773/ '14

2.

கௌரவ அசோக் அபேசிங்க,— சுகாதார மற்றும் சுதேச மருத்துவ அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) வைத்தியசாலைகளில் மருந்துகள் பற்றாக்குறைக்கு தீர்வாக பிரதேச ரீதியில் மருந்துகளைக் கொள்வனவு செய்வதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதா;

(ii) அதற்காக விலை மனுக்கள் பெறப்படுகின்ற முறை யாது;

(iii) மேற்படி விலை மனுக்களை மருத்துவ வழங்கல் பிரிவுடன் ஒப்பிட்டுப் பார்ப்பதற்கான வேலைத்திட்டமொன்று உள்ளதா;

(iv) பேராதனை பொது வைத்தியசாலையில் மருந்துகளை கொள்வனவு செய்கின்றபோது நேரிட்டுள்ள மோசடிகள் தொடர்பாக அமைச்சு அறிந்துள்ளதா

என்பதை அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

5245/ '14

3.

கௌரவ அஜித் மான்னப்பெரும,— நிதி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 1995.10.11 ஆம் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்பட்ட விவசாய ஓய்வூதியத்திட்டத்திற்குரிய புதிய வேலைத்திட்டத்தின் பிரகாரம் குறிப்பிட்ட சம்பளத்தைப் பெற்றுக்கொண்டிருக்கும் போது மரணித்த ஒருவரின் வாழ்க்கைத் துணைக்கு அல்லது தங்கிவாழ்வோருக்கு உரித்தான மாதாந்த ஓய்வூதியத்தை 2014.01.01 ஆம் திகதி தொடக்கம் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

(ii) இன்றேல், அதற்கான காரணம் யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) 2014.01.01 ஆம் திகதி தொடக்கம் ஆரம்பிக்கப்பட்ட புதிய வேலைத்திட்டத்தின் படி, 1987 ஆம் ஆண்டு அப்போது இருபத்தேழு வயதினைக் கொண்டிருக்கும் போது ஒரே தடவையில் ரூபா 3400/- ஐ செலுத்தி விவசாய ஓய்வூதிய உரித்தினைப் பெற்றுக்கொண்ட ஒருவர், 2010 ஆம் ஆண்டில் அப்போது நாற்பத்தைந்து வயதினைக் கொண்டிருந்தபோது ஒரே தடவையில் ரூபா 5740/- ஐ செலுத்தி அதற்கு பங்களிப்பு நல்கிய ஒருவர் மற்றும் 1987 ஆம் ஆண்டு இருபத்தேழு வயதினைக் கொண்டிருக்கும்போது விவசாய ஓய்வூதியத்திற்காக அரையாண்டுத் தவணைத் தொகையாக ரூபா 175/- ஐ செலுத்திக்கொண்டிருந்த ஒருவர் ஆகியோர் அவர்களது ஓய்வூதியத்திற்கான உரித்தினைப் பெற்றுக்கொள்ளும் பொருட்டு மேலதிக தொகையொன்றைச் செலுத்த வேண்டுமா என்பதையும்;

(ii) ஆமெனில், மேலே குறிப்பிடப்பட்ட ஒவ்வொரு சந்தர்ப்பத்திற்கும் ஏற்புடையதாக குறித்த நபர்களால் செலுத்தப்பட வேண்டிய பணத் தொகை வெவ்வேறாக எவ்வளவென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

5906/ ' 15

4.

கௌரவ அருந்திக்க பர்னாந்து,— நீதி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) சிறைச்சாலைகளிலுள்ள சிறைக்கைதிகளின் மனித உழைப்பைப் பெற்றுக்கொள்கின்றபோது அவர்களுக்கு வேதனம் வழங்கப்படுகின்றதா;

(ii) ஆமெனில், அந்த வேதனம் எவ்வளவு;

(iii) அந்த வேதனம் இறுதியாக திருத்தியமைக்கப்பட்ட திகதி யாது;

(iv) இன்றைய நிலைமைகளுக்கு அமைவாக அந்த வேதனம் அதிகரிக்கப்பட வேண்டியுள்ளதென்பதை அறிவாரா;

(v) பிரித்தானியா போன்ற நாடுகளில் சிறைக்கைதிகளுக்கு மாதமொன்றுக்கு 200 பவுண்கள் வழங்கப்படுகின்ற சூழ்நிலையில் இந்நாட்டுச் சிறைக்கைதி களுக்கு தற்போது வழங்கப்படுகின்ற வேதனத்தில் அதிகரிக்கப்படும் பணத்தொகை எவ்வளவு

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

5913/ ' 15

5.

கௌரவ (பேராசிரியர்) திஸ்ஸ விதாரண,— பிரதம அமைச்சரும், கொள்கை உருவாக்கம், பொருளாதார அலுவல்கள், சிறுவர், இளைஞர் மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) பொருளாதார அபிவிருத்தி, உற்பத்தித்திறன் ஊக்குவிப்பு உள்ளிட்ட அப்போதிருந்த பல அமைச்சுக்களை இரத்துச்செய்து அந்த அமைச்சுகளில் பணியாற்றிய அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் ஆற்றிய பணிகள் இடைநிறுத்தப்பட்டுள்ளதென்பதையும்;

(ii) ஆகவே, அவ்வாறான ஆயிரக்கணக்கான உத்தியோகத்தர்கள் தற்போது எவ்வித கடமைப்பணிகளும் இல்லாதிருக்கின்றார்கள் என்பதையும்;

(iii) இவர்களுக்கு அலுவலகங்களை பேணிவருவதற்கு அரசினால் வழங்கப்பட்ட கொடுப்பனவுகளும் தற்போது இரத்துச்செய்யப்பட்டுள்ளதென்பதையும்;

(iv) இதன் விளைவாக குத்தகை அடிப்படையில் பயன்படுத்தப்பட்ட அலுவலகக் கட்டிடங்களிலிருந்து வெளியேறவேண்டி நேரிட்டுள்ளதென்பதையும்;

(v) இதன் விளைவாக மேற்படி அலுவலகங்களுக்கு வழங்கப்பட்டிருந்த அரச ஆதனங்கள் பாதுகாப்பற்ற நிலைக்கு உள்ளாகியுள்ளதென்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி (அ) இல் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் தொடர்பாக மேற்கொள்ளப்படும் நடவடிக்கை யாதென்பதையும்;

(ii) மேற்படி அமைச்சுகளில் தற்போது பணியாற்றுகின்ற அபிவிருத்தி உத்தியோகத்தர்களையும் ஆட்சேர்க்கப்பட்ட பட்டதாரிகளையும் முறைசார்ந்த விதத்தில் அரச சேவைக்கு உள்ளீர்த்து பதவியுயர்வு முறைமையொன்றை அறிமுகப்படுத்துவதாக 100 நாள் வேலைத்திட்டத்தில் வழங்கப்பட்டுள்ள வாக்குறுதிக்கேற்ப அவ்வுத்தியோகத்தர்களை 100 நாட்களுக்குள் பயனுறுதிமிக்க பணியில் ஈடுபடுத்துவாரா என்பதையும்;

(iii) ஆமெனில், அத்தேதி யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

5916/ '15

6.

கௌரவ சுசந்த புஞ்சிநிலமே,— மக்கள் ஒழுங்கு மற்றும் கிறித்தவ சமய அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2015.01.08ஆம் திகதி இடம்பெற்ற சனாதிபதித் தேர்தலின் பின்னர் அரசியல் அல்லது வேறு ஏதேனும் காரணங்களுக்காக பொலிஸ் அல்லது ஏனைய பாதுகாப்பு பிரிவுகளினால் சோதனைக்கு உட்படுத்தப்பட்ட கத்தோலிக்க ஆலயங்கள், இந்து சமயத் தலங்கள் மற்றும் முஸ்லிம் பள்ளிவாசல்களின் எண்ணிக்கை வெவ்வேறாக யாது;

(ii) மேற்படி ஒவ்வொரு சோதனை நடவடிக்கையும் மேற்கொள்ளப்பட்டுள்ள குறித்த சமயத் தலத்தின் பெயர், முகவரி, தொலைபேசி இலக்கம், சோதனைக்கு உட்படுத்தப்பட்ட திகதி மற்றும் அதற்கு ஏதுவான காரணங்கள் ஆகியன கத்தோலிக்க, இந்து மற்றும் முஸ்லிம் சமயத் தலங்களுக்கு அமைய வெவ்வேறாக யாவை

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

6018/ '15

7.

கௌரவ டக்ளஸ் தேவானந்தா,— பாதுகாப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் இரகசியமான தடுப்பு முகாம்கள் உள்ளனவா;

(ii) ஆமெனில், அந்த முகாம்கள் பற்றிய விபரங்கள் யாவை;

(iii) அந்த முகாம்களில் தடுத்துவைக்கப்பட்டுள்ள கைதிகள் யாவர்;

(iv) அவர்கள் பற்றிய தகவல்கள் யாவை

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

6036/ '15

8.

கௌரவ ராஜீவ விஜேசிங்க,— வெளிநாட்டலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) ஜெனீவாவில் ஐக்கிய நாடுகளுக்கான இலங்கையின் முன்னாள் நிரந்தர வதிவிடப் பிரதிநிதி திருமதி தமாரா குணநாயகம் அவர்கள் 1989 முதல் 1990 வரையான காலப்பகுதியில் தமிழீழ விடுதலைப் புலிகளின் பிரதிநிதியாக இருந்துள்ளார் என்று "சுவர்ணவாஹினி" க்கு அண்மையில் வழங்கிய பேட்டி ஒன்றில் அவர் கூறியுள்ளாரா என்பதையும்;

(ii) அவ்வாறெனில், என்ன சான்றின் அடிப்படையில் குறித்த கூற்று வெளியிடப்பட்டது என்பதையும்;

(iii) மேலே குறிப்பிடப்பட்ட சான்று முக்கியமான சாட்சியாகக் கருதப்படுமிடத்து திருமதி குணநாயகம் அவர்களை நாடு கடத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமா என்பதையும்

அவர் கூறுவாரா?

(ஆ) மேலே (அ)(i) இல் குறிப்பிடப்பட்ட காலப்பகுதியிலும் அதை அண்மித்த காலப்பகுதியிலும் திருமதி குணநாயகம் அவர்கள் ஒரு மனித உரிமை செயற்பாட்டாளராக இருந்ததுடன் அப்போதைய வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் தொடர்புபட்டிருந்த "அன்னையர் முன்னனியின்" செயற்பாடுகளுக்கு ஆதரவாகவும் இருந்தார் என்பதையும் அவர் அறிவாரா?

(இ) திருமதி குணநாயகம் அவர்கள் பயங்கரவாதத்திற்கு அனுதாபம் காட்டுகிறார் என குற்றஞ்சாட்டுவது, அவர் மனித உரிமைகள் தொடர்பான துறையில் செயற்பாட்டாளராக இருந்ததன் காரணத்தினாலா என்பதை அவர் மேலும் கூறுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

4534/ '13

9.

கௌரவ புத்திக பதிரண,— நிதி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 1980 யூலை வேலைநிறுத்தத்தின்போது தொழிலை இழந்தவர்களில் இற்றைவரை நிவாரணம் எதுவும் கிடைக்காதவர்களுக்கு ரூபா 5000.00 கொடுப்பனவொன்று வழங்கப்படுமென்ற 2013 வரவு செலவு திட்ட முன்மொழிவின்படி இற்றைவரை இக்கொடுப்பனவு வழங்கப்பட்டுள்ளவர்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) மேற்படி கொடுப்பனவை செலுத்துவதற்காக அரசாங்கத்தினால் இற்றைவரை செலவிடப்பட்டுள்ள பணத்தொகை யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மேற்படி (அ)(i) இல் குறிப்பிடப்பட்டுள்ள முன்மொழிவை நடைமுறைப்படுத்த ஆரம்பிக்கின்றபோது எவ்வித நலனும் பெறாது மரணித்த யூலை வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டவர்களுக்குரிய மேற்படி நன்மைகளை சம்பந்தப்பட்ட உரிமையாளர்களுக்கு பெற்றுக்கொடுத்தல் தொடர்பில் பின்பற்றப்படும் முறையியல் யாதென்பதையும்;

(ii) 1980 யூலை வேலைநிறுத்தத்தில் பங்கேற்று இற்றைவரை நிவாரணம் பெற்றுக்கொள்ளாத எவரேனுமொருவர் மேற்படி பணத்தொகையை பெற்றுக்கொள்வதற்காக பின்பற்ற வேண்டிய முறையியல் யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

4778/ '14

10.

கௌரவ அசோக் அபேசிங்ஹ,— சுகாதார மற்றும் சுதேச மருத்துவ அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) சுகாதார மற்றும் சுதேச மருத்துவ அமைச்சின் கீழ் உள்ள மொத்த வைத்தியசாலைகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) மாகாண சபைகளின் கீழ் உள்ள வைத்தியசாலைகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) 2012 வரவு செலவுத் திட்டத்தின் மூலம் மாகாண சபைகளின் கீழ் இயங்கும் வைத்தியசாலைகளின் தரத்தை விருத்தி செய்வதற்கான நிகழ்ச்சித்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளனவா என்பதையும்;

(iv) மேற்படி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ், மாகாண சபைகளின் மூலம் பிரதேச வைத்தியசாலைகளுக்கு அவசியமற்ற உபகரணங்கள் விநியோகிக்கப்பட்டிருந்தன என்பதை அறிவாரா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) மேற்படி (அ) (iii) இல் குறிப்பிடப்பட்டுள்ள நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் மாகாண சபை வைத்தியசாலைகளுக்கென ஒதுக்கப்பட்ட பணத் தொகை ஒவ்வொரு மாகாண சபை வாரியாக வெவ்வேறாக எவ்வளவு என்பதை அவர் சபையில் சமர்ப்பிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

5575/ '14

11.

கௌரவ அஜித் மான்னப்பெரும,— சுகாதார மற்றும் சுதேச மருத்துவ அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தற்போது அமுலிலுள்ள ஆயுர்வேத சட்டம் அறிமுகப்படுத்தப்பட்ட ஆண்டு யாதென்பதையும்;

(ii) தற்போது மேற்படி சட்டம் திருத்தப்பட்டுள்ள தவணைகளின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(iii) இது இறுதியாக திருத்தப்பட்ட ஆண்டு யாதென்பதையும்;

(iv) இற்றைவரை இச்சட்டம் திருத்தப்படவில்லையெனில், அதற்கான காரணம் யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) ஆயுர்வேத மருத்துவ பட்டதாரிகள், மருத்துவ உத்தியோகத்தர் என்ற பெயரிலா இன்றேல் மருத்துவ நிபுணர்கள் என்ற பெயரிலா அழைக்கப்படுகின்றார்கள் என்பதையும்;

(ii) இவர்களை இப்பெயரில் அழைப்பதற்கான காரணம் யாதென்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

5917/ '15

12.

கௌரவ சுசந்த புஞ்சிநிலமே,— மக்கள் ஒழுங்கு மற்றும் கிறித்தவ சமய அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2015 சனாதிபதித் தேர்தலின்போது தபால் மூல வாக்கெடுப்பு நடைபெற்ற 2014.12.23 ஆம் திகதி கோமரங்கடவல பிரதேச செயலகத்தினுள் கமநல அபிவிருத்தித் திணைக்களத்தின் ஊழியரொருவர் அரசியல்வாதியொருவராலும் அவரது பாதுகாவலர்களாலும் தாக்கப்பட்டார் என்பதையும்;

(ii) மேற்படி தாக்குதல் காரணமாக தாக்கப்பட்டவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தார் என்பதையும்

அவர் அறிவாரா என்பதையும்

(ஆ) (i) கோமரங்கடவல பிரதேச சபையின் உறுப்பினரொருவருமான சந்துன் ஹேமந்த என்ற மேற்படி ஊழியர் மீது அரசியல் காரணமாக மேற்கொள்ளப்பட்ட மேற்படி தாக்குதல் தொடர்பாக விசாரணை நடத்தப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனின், இது தொடர்பாக மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(iii) குற்றஞ்சாட்டப்பட்டவர்களின் பெயர்கள் மற்றும் ஏனைய தகவல்கள் யாவை என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

4538/ '13

13\. கௌரவ புத்திக பதிரண,— வெளிநாட்டு தொழில்வாய்ப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,—(2)

(அ) (i) 2013 ஆம் ஆண்டு வரவுசெலவு திட்டத்தின் மூலம் வெளிநாட்டு வேலைவாய்ப்புக்காக செல்லும் இலங்கையர்களின் திறன்களை உயர் மட்டத்திற்குக் கொண்டுவரும் பொருட்டும் அந்நாடுகளின் சமூக, கலாச்சார சூழலுக்கு இயைபாக்கம் அடைவதை இலகுபடுத்துவதற்குமான விசேட பாடநெறிகளைக் கொண்ட புதிய வெளிநாட்டு வேலைவாய்ப்பு தொழில்நுட்ப கல்லூரிகள் இரண்டினை நிறுவுவதற்கு பிரேரிக்கப்பட்டதென்பதை அறிவாரா;

(ii) மேற்படி இரண்டு கல்லூரிகளும் நிறுவப்பட்டுள்ள இடங்கள் யாவையென்பதையும்;

(iii) இதற்காக முதலீடு செய்யப்பட்டுள்ள மொத்த பணத்தொகை எவ்வளவென்பதையும்;

(iv) மேற்படி தொழில்நுட்பக் கல்லூரிகளில் பயிற்சியளிக்கப்படுகின்ற தொழில்துறைகள் யாவையென்பதையும்;

(v) தற்போது மேற்படி நிறுவனங்களிலிருந்து பயிற்சிகளைப் பெற்று வெளிநாட்டு தொழில்களுக்காக சென்றுள்ள வெளிநாட்டுத் தொழில்புரியும் வீரர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

4781/ '14

14\. கௌரவ அசோக் அபேசிங்க,— சுகாதார மற்றும் சுதேச மருத்துவ அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) தற்போது நாட்டினுள் மருந்து விலைக் கட்டுப்பாடொன்று நடைமுறையில் உள்ளதா என்பதையும்;

(ii) சில காலங்களுக்கு முன்னர் இலங்கையில் மருந்து விலைக் கட்டுப்பாடொன்று நடைமுறையிலிருந்ததென்பதை அறிவாரா என்பதையும்;

(iii) ஆமெனில், மேற்படி விலைக் கட்டுப்பாடு நடைமுறையில் இருந்த காலகட்டம் யாதென்பதையும்;

(iv) மேற்படி காலகட்டத்தினுள் கட்டுப்பாட்டு விலையை கொண்டிருந்த மருந்து வகைகளின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(v) மருந்து விலைக் கட்டுப்பாட்டுக்காக நியமிக்கப்பட்டுள்ள குழு தற்போது அதற்கு ஏற்புடையதான விதப்புரைகளை வழங்கியுள்ளதா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

5576/ '14

15\. கௌரவ அஜித் மான்னப்பெரும,— சுகாதார மற்றும் சுதேச மருத்துவ அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2012 ஆம் ஆண்டு பட்டதாரிகளுக்கு தொழில்வாய்ப்பினை பெற்றுக் கொடுப்பதற்காக விண்ணப்பங்கள் கோரப்பட்ட சந்தர்ப்பத்தில் அதற்காக விண்ணப்பித்திருந்த ஆயுர்வேத மருத்துவ பட்டதாரிகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) இவர்களில் தொழில் வாய்ப்பு வழங்கப்பட்டவர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) 2011.12.31 ஆம் திகதியாகின்றபோது தொழில்வாய்ப்பற்றிருந்த ஆயுர்வேத மருத்துவ பட்டதாரிகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) 2012 ஆம் ஆண்டில் இவர்களுக்கு தொழில் வாய்ப்பு வழங்குவதற்கு வேலைத்திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருந்ததா என்பதையும்;

(iii) ஆமெனில், அந்த வேலைத்திட்டம் யாதென்பதையும்;

(iv) அதன் கீழ் தொழில் வாய்ப்பு வழங்கப்பட்ட ஆயுர்வேத மருத்துவர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

---

# பொது அலுவல்கள் ஆரம்பத்தின் போது

## பிரேரணை முன்னறிவித்தல்கள்

1.

பாராளுமன்றச் சபை முதல்வர்,— பாராளுமன்ற அலுவல்கள்,— ஒழுங்குப் பத்திரத்தில் காணப்படும் பொது அலுவல்களில் 10 முதல் 15 ஆம் இலக்க பிரேரணை மீதான நடவடிக்கைகள் இன்றைய அமர்வில் 23 ஆம் இலக்க நிலையியற் கட்டளையின் ஏற்பாடுகளிலிருந்து விலக்குப்பெறுமாக.

2.

பாராளுமன்றச் சபை முதல்வர்,— பாராளுமன்ற அமர்வு (இல.1),— 7ஆம் இலக்க நிலையியற் கட்டளையின் ஏற்பாடுகளினாலும் 2010.07.09 ஆம் திகதி பாராளுமன்றத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பிரேரணையினாலும் தடைபெறாமல் 2015 ஏப்ரல் மாதம் 22ஆம் திகதி புதன்கிழமை சபை அமர்வு நேரம் மு.ப. 9.30 மணி முதல் பி.ப. 6.30 மணிவரை இருக்குமாக. பி.ப. 6.30 மணிக்கு சபாநாயகர் பாராளுமன்றத்தை வினாவின்றி ஒத்திவைப்பாராக.

3.

பாராளுமன்றச் சபை முதல்வர்,— பாராளுமன்ற அமர்வு (இல.2),— இப்பாராளுமன்றம் இன்று அதன் அமர்வு கலையும் போது 2015, ஏப்பிறல் மாதம் 22 ஆம் திகதி, புதன்கிழமை மு.ப. 9.30 மணி வரை ஒத்திவைக்கப்படுமாக.

---

# பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

* 1.

அரசியலமைப்புக்கான பத்தொன்பதாம் திருத்தச் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 2.

உண்ணாட்டரசிறை (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 3.

சேர்பெறுமதி வரி (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 4.

நாட்டைக் கட்டியெழுப்புதல் வரி (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 5.

நிதிச் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 6.

பொருளாதாரச் சேவை விதிப்பனவு (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 7.

தொலைத்தொடர்பு அறவீடு (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 8.

பந்தய, சூதாட்ட விதிப்பனவு (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 9.

தேசிய ஆசிரியர் கல்வி அதிகாரசபை (நீக்கல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 10.

நிதி அமைச்சர்,— ஒதுக்கீட்டுச் சட்டத்தின் கீழான தீர்மானம் (இல.1),— 2013ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவினால், தமக்களிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம், அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன், நிதி அமைச்சரால் செய்யப்பட்ட கட்டளை இல.32 இல் குறித்துரைக்கப்பட்ட கட்டளை அங்கீகரிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

## 2013ஆம் ஆண்டின் 36ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8ஆம் பிரிவின் கீழான கட்டளை இல.32

2013 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவினால் எனக்கு அளிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம் நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க ஆகிய நான் அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன் இக் கட்டளை மூலம் அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் 30602 ஆம் இலக்க, செயற்பாட்டு விடயம் "புகையிரத பண்டகசாலை முற்பணம் - இலங்கை புகையிரத திணைக்களம்" என்பதற்கெதிராக குறித்துரைக்கப்பட்ட எல்லைகளை மாற்றுகின்றேன்:-

(i) அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் II இல் குறித்துரைக்கப்பட்ட செலவின் உச்ச எல்லை — ரூபா. 1,700,000,000 இலிருந்து ரூபா. 2,200,000,000 வரை

(ii) அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் III இல் குறித்துரைக்கப்பட்ட பெறுகைகளின் ஆகக்குறைந்த எல்லை — மீளாய்வு செய்யப்படவில்லை.

(iii) அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் IV இல் குறித்துரைக்கப்பட்ட பற்று மீதியின் உச்ச எல்லை — ரூபா. 6,102,000,000 இலிருந்து ரூபா. 6,602,000,000 வரை

(iv) அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் V இல் குறித்துரைக்கப்பட்ட பற்று மீதியின் உச்ச எல்லை — ரூபா. 850,000,000 இலிருந்து ரூபா. 1,000,000,000 வரை

(இக்கட்டளை 2014.12.31 ஆம் திகதி வரை மட்டுமே செல்லுபடியாகும்.)

*ஒப்பம்: ரவி கருணாநாயக்க*
நிதி அமைச்சர்.

2015.04.10 ஆந் திகதி
கொழும்பு 01.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 11.

நிதி அமைச்சர்,— ஒதுக்கீட்டுச் சட்டத்தின் கீழான தீர்மானம் (இல.2),— 2013ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவினால், தமக்களிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம், அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன், நிதி அமைச்சரால் செய்யப்பட்ட கட்டளை இல.33 இல் குறித்துரைக்கப்பட்ட கட்டளை அங்கீகரிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

## 2013ஆம் ஆண்டின் 36ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8ஆம் பிரிவின் கீழான கட்டளை இல.33

2013 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவினால் எனக்கு அளிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம் நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க ஆகிய நான் அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன் இக் கட்டளை மூலம் அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் 24702 ஆம் இலக்க செயற்பாட்டு விடயம் "பறிமுதல் செய்யப்பட்டு அரசுடமையாக்கப்பட்ட பொருட்கள் தொடர்பான செலவினங்கள் முற்பணக் கணக்கு - இலங்கை சுங்கத் திணைக்களத்திற்கு" அளிக்கப்பட்டுள்ள விடயத்துக்காக குறித்துரைக்கப்பட்ட எல்லைகளை மாற்றுகின்றேன்:-

(i) அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் II இல் குறித்துரைக்கப்பட்ட செலவின் உச்ச எல்லை — மீளாய்வு செய்யப்படவில்லை.

(ii) அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் III இல் குறித்துரைக்கப்பட்ட பெறுகைகளின் உச்ச எல்லை — மீளாய்வு செய்யப்படவில்லை.

(iii) அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் IV இல் குறித்துரைக்கப்பட்ட பற்று மீதியின் உச்ச எல்லை — ரூபா. 20,000,000 இலிருந்து ரூபா. 25,000,000 வரை

(iv) அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் V இல் குறித்துரைக்கப்பட்ட பொறுப்புக்களின் உச்ச எல்லை — மீளாய்வு செய்யப்படவில்லை

(இக்கட்டளை 2014.12.31 ஆம் திகதி வரை மட்டுமே செல்லுபடியாகும்.)

*ஒப்பம்: ரவி கருணாநாயக்க*
நிதி அமைச்சர்.

2015.04.10 ஆந் திகதி
கொழும்பு 01.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 12.

நிதி அமைச்சர்,— ஒதுக்கீட்டுச் சட்டத்தின் கீழான தீர்மானம் (இல.3),— 2013ஆம் ஆண்டின் 36ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8ஆம் பிரிவினால், தமக்களிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம், அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன், நிதி அமைச்சரால் செய்யப்பட்ட கட்டளை இல. 34 இல் குறித்துரைக்கப்பட்ட கட்டளை அங்கீகரிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

## 2013ஆம் ஆண்டின் 36ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8ஆம் பிரிவின் கீழான கட்டளை இல.34

2013ஆம் ஆண்டின் 36ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8ஆம் பிரிவினால் எனக்கு அளிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம் நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க ஆகிய நான் அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன் இக் கட்டளை மூலம் அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் 21302 ஆம் இலக்க, செயற்பாட்டு விடயம் "அச்சிடல், பிரசாரம் மற்றும் புத்தகங்கள் விற்பனைக்கான (வெளியீட்டு உரிமையை பகிரங்கப்படுத்தல், மொழிபெயர்ப்பு உரிமையைக் கொள்வனவு செய்தல், மொழிபெயர்ப்புக் கட்டணம் மற்றும் பணியாளர்களின் சம்பளக் கொடுப்பனவு உட்பட) முற்பணக் கணக்கு — கல்வி வெளியீட்டுத் திணைக்களம்" என்பதற்கெதிராக குறித்துரைக்கப்பட்ட எல்லைகளை மாற்றுகின்றேன்:-

(i) அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் II இல் குறித்துரைக்கப்பட்ட செலவின் உச்ச எல்லை — *மீளாய்வு செய்யப்படவில்லை*

(ii) அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் III இல் குறித்துரைக்கப்பட்ட பெறுகைகளின் ஆகக்குறைந்த எல்லை — ரூபா. 2,900,000,000 இலிருந்து ரூபா. 2,500,000,000 வரை

(iii) அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் IV இல் குறித்துரைக்கப்பட்ட பற்று மீதியின் உச்ச எல்லை — *மீளாய்வு செய்யப்படவில்லை.*

(iv) அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் V இல் குறித்துரைக்கப்பட்ட பொறுப்புக்களின் உச்ச எல்லை — ரூபா. 1,500,000,000 இலிருந்து ரூபா. 2,250,000,000 வரை

(இக்கட்டளை 2014.12.31 ஆம் திகதி வரை மட்டுமே செல்லுபடியாகும்.)

*ஒப்பம்: ரவி கருணாநாயக்க*
நிதி அமைச்சர்.

2015.04.10 ஆந் திகதி
கொழும்பு 01.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 13.

நிதி அமைச்சர்,— ஒதுக்கீட்டுச் சட்டத்தின் கீழான தீர்மானம் (இல.4),— 2013 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவினால், தமக்களிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம், அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன், நிதி அமைச்சரால் செய்யப்பட்ட கட்டளை இல.35 இல் குறித்துரைக்கப்பட்ட கட்டளை அங்கீகரிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

## 2013ஆம் ஆண்டின் 36ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8ஆம் பிரிவின் கீழான கட்டளை இல.35

2013ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவினால் எனக்கு அளிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம் நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க ஆகிய நான் அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன் இக் கட்டளை மூலம் அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் 31002 ஆம் இலக்க, செயற்பாட்டு விடயம் "பண்டகசாலை முற்பணக் கணக்கு - அரசாங்க தொழிற்சாலை" என்பதற்கெதிராக குறித்துரைக்கப்பட்ட எல்லைகளை மாற்றுகின்றேன்:-

(i) அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் II இல் குறித்துரைக்கப்பட்ட செலவின் உச்ச எல்லை — ரூபா. 120,000,000 இலிருந்து ரூபா. 170,000,000 வரை

(ii) அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் III இல் குறித்துரைக்கப்பட்ட பெறுகைகளின் ஆகக்குறைந்த எல்லை — *மீளாய்வு செய்யப்படவில்லை*

(iii) அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் IV இல் குறித்துரைக்கப்பட்ட பற்று மீதியின் உச்ச எல்லை — *மீளாய்வு செய்யப்படவில்லை*

(iv) அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் V இல் குறித்துரைக்கப்பட்ட பொறுப்புக்களின் உச்ச எல்லை — *மீளாய்வு செய்யப்படவில்லை.*

(இக்கட்டளை 2014.12.31 ஆம் திகதி வரை மட்டுமே செல்லுபடியாகும்.)

*ஒப்பம்: ரவி கருணாநாயக்க*
நிதி அமைச்சர்.

2015.04.10 ஆந் திகதி
கொழும்பு 01.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 14.

நிதி அமைச்சர்,— ஒதுக்கீட்டுச் சட்டத்தின் கீழான தீர்மானம் (இல.5),— 2013 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவினால், தமக்களிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம், அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன், நிதி அமைச்சரால் செய்யப்பட்ட கட்டளை இல.36 இல் குறித்துரைக்கப்பட்ட கட்டளை அங்கீகரிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

## 2013 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவின் கீழான கட்டளை இல.36

2013 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவினால் எனக்கு அளிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம் நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க ஆகிய நான் அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன், இக் கட்டளை மூலம், அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் 31003 ஆம் இலக்க, செயற்பாட்டு விடயம் "முடிக்கப்பட்ட வேலை முற்பணக் கணக்கு - அரச தொழிற்சாலை" என்பதற்கெதிராக குறித்துரைக்கப்பட்ட எல்லைகளை மாற்றுகின்றேன்:-

(i) அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் II இல் குறித்துரைக்கப்பட்ட செலவின் உச்ச எல்லை — ரூபா. 260,000,000 இலிருந்து ரூபா. 450,000,000 வரை

(ii) அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் III இல் குறித்துரைக்கப்பட்ட பெறுகைகளின் ஆகக்குறைந்த எல்லை — மீளாய்வு செய்யப்படவில்லை

(iii) அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் IV இல் குறித்துரைக்கப்பட்ட பற்று மீதியின் உச்ச எல்லை — மீளாய்வு செய்யப்படவில்லை

(iv) அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் V இல் குறித்துரைக்கப்பட்ட பொறுப்புக்களின் உச்ச எல்லை — மீளாய்வு செய்யப்படவில்லை.

(இக்கட்டளை 2014.12.31 ஆம் திகதி வரை மட்டுமே செல்லுபடியாகும்.)

*ஒப்பம்: ரவி கருணாநாயக்க*
நிதி அமைச்சர்.

2015.04.10 ஆந் திகதி
கொழும்பு 01.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 15.

நிதி அமைச்சர்,— ஒதுக்கீட்டுச் சட்டத்தின் கீழான தீர்மானம் (இல.6),— 2013ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவினால், தமக்களிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம், அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன், நிதி அமைச்சரால் செய்யப்பட்ட இச்சட்டத்தின் உப பிரிவில் உரிய முறையில் குறித்துரைக்கப்பட்ட நியமங்கள் அங்கீகரிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

(இக்கட்டளை 2014.12.31 ஆம் திகதி வரை மட்டுமே செல்லுபடியாகும்.)

## அட்டவணை

### 2013 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவின் கீழான கட்டளை

நிதி ஆண்டு 2014 தொடர்பில், 2013 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவின் கீழ் நிதி அமைச்சரினால் அதிகாரமளிக்கப்பட்ட அரச ஊழியர்களுக்கான முற்பணங்கள் சம்பந்தமான முற்பணக் கணக்குகளின் எல்லைகளின் மாற்றங்களின் அட்டவணை

**குழுத்தொடர் இலக்கம். 01**

2013 அம் ஆண்டின் இலக்கம் 36 ஐக் கொண்ட 8 வது பிரிவின் கீழ் எனக்களிக்கப்பட்ட அதிகாரங்களின்படி, ரவி கருணாநாயக்க ஆகிய நான் நிதி அமைச்சர் என்ற வகையில் அரச அங்கீகாரத்தின் கீழ் இங்கு குறிப்பிடப்பட்டுள்ள உப அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அரச ஊழியர்களுக்கான முற்பணக் கணக்குகளில் கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள விடய இலக்கங்களுக்கு அமைவான சட்டத்தின் மூன்றாம் உப பிரிவின் நிரல் இலக்கம் II மற்றும் IV இல் குறிப்பிடப்பட்டுள்ள உச்ச ஒதுக்கீட்டெல்லைகளையும் இலக்கம் III இல் குறிப்பிடப்பட்டுள்ள ஆகக் குறைந்த எல்லைகளையும் மாற்றியமைக்கின்றேன். 14001, 18201, 10501, 22801, 20801, 27701, 30301, 26901, 27001, 27201, 24201, 28601, 10201, 25601, 25801, 28201, 28501, 11601, 28801, 30601, 27901, 27801, 27401, 27501, 21901, 17801, 12601, 11101, 18801, 21101, மற்றும் 19001.

| தொ. இல. | அமைச்சு / திணைக்களம் | விடய இல. | II அரசாங்கத்தின் செயற்பாடுகளின் செலவினத்தின் உச்ச எல்லைகள் | | III அரசாங்கத்தின் செயற்பாடுகளின் பெறுகைகளின் ஆகக் குறைந்த எல்லைகள் | | IV அரசாங்கத்தின் செயற்பாடுகளின் பற்று மீதிகளின் உச்ச எல்லைகள் | | கட்டளை இல. |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | ரூபா இருந்து | ரூபா வரை | ரூபா இருந்து | ரூபா வரை | ரூபா இருந்து | ரூபா வரை | |
| 1. | கால்நடை வளர்ப்பு, கிராமிய சனசமூக அபிவிருத்தி அமைச்சு | 14001 | 7,000,000 | 10,000,000 | 3,700,000 | 4,000,000 | - | - | 1 |
| 2. | வெளிநாட்டு வேலைவாய்ப்பு ஊக்குவிப்பு நலன்புரி அமைச்சு | 18201 | 5,000,000 | 8,000,000 | 1,100,000 | 4,100,000 | - | - | 2 |
| 3. | பொருளாதார அபிவிருத்தி அமைச்சு | 10501 | 140,000,000 | 170,000,000 | 60,000,000 | 90,000,000 | - | - | 3 |
| 4. | நீதி மன்றங்களின் நிர்வாகம் | 22801 | 260,420,000 | 290,420,000 | 170,000,000 | 175,000,000 | 850,000,000 | 1,100,000,000 | 4 |
| 5. | தேசிய நூதனசாலைகள் திணைக்களம் | 20801 | 9,000,000 | 12,000,000 | - | - | - | - | 5 |

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 6. | மாவட்டச் செயலகம், மொனராகலை | 27701 | - | - | 25,000,000 | 24,000,000 | - | - | 6 |
| 7. | புடவைக் கைத்தொழில் திணைக்களம் | 30301 | - | - | 3,000,000 | 2,900,000 | - | - | 7 |
| 8. | மாவட்டச் செயலகம்/ கச்சேரி, மட்டக்களப்பு | 26901 | - | - | 23,000,000 | 18,000,000 | 90,000,000 | 100,000,000 | 8 |
| 9. | மாவட்டச் செயலகம்/ கச்சேரி, அம்பாறை | 27001 | - | - | 35,000,000 | 30,000,000 | - | - | 9 |
| 10. | மாவட்டச் செயலகம், குருணாகல் | 27201 | - | - | 75,000,000 | 65,000,000 | - | - | 10 |
| 11. | முகாமைத்துவ சேவைகள் திணைக்களம் | 24201 | - | - | 2,000,000 | 1,700,000 | - | - | 11 |
| 12. | காணி ஆணையாளர் நாயகம் | 28601 | - | - | 12,000,000 | 11,500,000 | - | - | 12 |
| 13. | நிதி, திட்டமிடல் அமைச்சு | 10201 | 15,000,000 | 12,000,000 | 9,500,000 | 8,500,000 | - | - | 13 |
| 14. | மாவட்டச் செயலகம், கம்பஹா | 25601 | - | - | 56,000,000 | 53,000,000 | - | - | 14 |
| 15. | மாவட்டச் செயலகம், கண்டி | 25801 | - | - | 51,000,000 | 46,000,000 | - | - | 15 |
| 16. | நீர்ப்பாசனத் திணைக்களம் | 28201 | - | - | 100,000,000 | 97,000,000 | - | - | 16 |
| 17. | கமத்தொழில் திணைக்களம் | 28501 | - | - | 150,000,000 | 120,000,000 | - | - | 17 |
| 18. | கூட்டுறவு, உள்நாட்டு வர்த்தக அமைச்சு | 11601 | 6,000,000 | 7,500,000 | - | - | - | - | 18 |
| 19. | நில அளவையாளர் திணைக்களம் | 28801 | - | - | 100,000,000 | 86,000,000 | - | - | 19 |
| 20. | இலங்கை புகையிரதத் திணைக்களம் | 30601 | - | - | 385,000,000 | 290,000,000 | - | - | 20 |
| 21. | மாவட்டச் செயலகம், கேகாலை | 27901 | - | - | 30,000,000 | 26,000,000 | - | - | 21 |

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 22. | மாவட்டச் செயலகம், இரத்தினபுரி | 27801 | - | - | 38,000,000 | 32,000,000 | - | - | 22 |
| 23. | மாவட்டச் செயலகம், அநுராதபுரம் | 27401 | - | - | 40,000,000 | 35,000,000 | - | - | 23 |
| 24. | மாவட்டச் செயலகம், பொலன்னறுவை | 27501 | - | - | 18,000,000 | 15,000,000 | - | - | 24 |
| 25. | விளையாட்டுத்துறை அபிவிருத்தித் திணைக்களம் | 21901 | 8,000,000 | 8,011,000 | - | - | - | - | 25 |
| 26. | தெங்கு அபிவிருத்தி, மக்கள் தோட்ட அபிவிருத்தி அமைச்சு | 17801 | 4,000,000 | 5,000,000 | - | - | - | - | 26 |
| 27. | கல்வி அமைச்சு | 12601 | - | - | 680,000,000 | 675,000,000 | - | - | 27 |
| 28. | சுகாதார அமைச்சு | 11101 | - | - | 710,000,000 | 653,000,000 | - | - | 28 |
| 29. | தாவரவியல் பூங்கா மற்றும் பொதுப் பொழுதுபோக்கு அலுவல்கள் அமைச்சு | 18801 | 2,000,000 | 2,060,110 | - | - | - | - | 29 |
| 30. | அரசாங்க அச்சாளர் திணைக்கம் | 21101 | - | - | 45,000,000 | 44,000,000 | - | - | 30 |
| 31. | சட்டமும் ஒழுங்கும் அமைச்சு | 19001 | - | - | 83,000,000 | 60,000,000 | - | - | 31 |
| | மொத்தம் | | 456,420,000 | 524,991,110 | 2,905,300,000 | 2,666,700,000 | 940,000,000 | 1,200,000,000 | |

2015 ஏப்பிரல் 10 ஆம் திகதி
கொழும்பு - 01.

ஒப்பம்: ரவி கருணாநாயக்க
நிதி அமைச்சர்.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 16.

வெளிநாட்டலுவல்கள் அமைச்சர்,— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் கீழ் தீர்மானம் (இல.1),— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கத்திற்கும் குவைட் நாட்டரசின் அரசாங்கத்திற்கும் இடையே முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் இருவயினொத்த முதலீட்டுப் பாதுகாப்பு ஒப்பந்தம், அத்தகைய வெளிநாட்டு அரசினாலும், அதன் சுதேசிகளினாலும் அல்லது அத்தகைய அரசின் சட்டங்களின் கீழ் கூட்டிணைக்கப்பட்ட அல்லது தாபிக்கப்பட்ட கூட்டுத்தாபனங் களினாலும், கம்பனிகளினாலும், ஏனைய கழகங்களினாலும் இலங்கையில் முதலீடு செய்யப்பட்ட முதலீடுகளை மேம்படுத்துவதற்கும் காப்பதற்குமாக 2009 நவெம்பர் மாதம் 05 ஆம் திகதியன்று கைச்சாத்திடப்பட்டதும் 2011.09.07 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒப்பந்தமானது அது தேசியப் பொருளாதார அபிவிருத்திக்கு அவசியமாகவுள்ளதென இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 157 ஆம் உறுப்புரையின் கீழ் அங்கீகரிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 17.

வெளிநாட்டலுவல்கள் அமைச்சர்,— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் கீழ் தீர்மானம் (இல.2),— முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் பாதுகாப்பு என்பவற்றுக்கான இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கம் மற்றும் வியட்நாம் சோசலிச குடியரசு அரசாங்கம் ஆகியவற்றுக்கிடையேயான ஒப்பந்தம், அத்தகைய வெளிநாட்டு அரசினாலும், அதன் சுதேசிகளினாலும் அல்லது அத்தகைய அரசின் சட்டங்களின் கீழ் கூட்டிணைக்கப்பட்ட அல்லது தாபிக்கப்பட்ட கூட்டுத்தாபனங்களினாலும், கம்பனிகளினாலும், ஏனைய கழகங்களினாலும் இலங்கையில் முதலீடு செய்யப்பட்ட முதலீடுகளை மேம்படுத்துவதற்கும் காப்பதற்குமாக 2009 ஒற்றோபர் மாதம் 22 ஆம் திகதியன்று கைச்சாத்திடப்பட்டதும் 2011.09.07 ஆம் திகதி சமர்ப்பிக்கப் பட்டதுமான ஒப்பந்தமானது அது தேசியப் பொருளாதார அபிவிருத்திக்கு அவசியமாக உள்ளதென இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 157 ஆம் உறுப்புரையின் கீழ் அங்கீகரிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 18.

வெளிநாட்டலுவல்கள் அமைச்சர்,— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் கீழ் தீர்மானம் (இல. 3),— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கத்திற்கும் செக் குடியரசு அரசாங்கத்திற்கும் இடையே முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் இருவயினொத்த முதலீட்டுப் பாதுகாப்பு ஒப்பந்தம், அத்தகைய அத்தகைய வெளிநாட்டு அரசினாலும், அதன் சுதேசிகளினாலும் அல்லது அத்தகைய அரசின் சட்டங்களின் கீழ் கூட்டிணைக்கப்பட்ட அல்லது தாபிக்கப்பட்ட கூட்டுத்தாபனங்களினாலும், கம்பனிகளினாலும், ஏனைய கழகங்களினாலும் இலங்கையில் முதலீடு செய்யப்பட்ட முதலீடுகளை மேம்படுத்துவதற்கும் காப்பதற்குமாக 2011 மார்ச் 28 ஆம் திகதியன்று கைச்சாத்திடப்பட்டதும், 2014.08.05 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒப்பந்தமானது தேசிய பொருளாதார அபிவிருத்திக்கு அத்தியவசியமாகவுள்ளதென இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 157 ஆம் உறுப்புரையின் கீழ் அங்கீகரிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கிறது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 19.

நிதி அமைச்சர்,— முத்திரைக் கட்டண (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் கட்டளை,— அரசியலமைப்பின் 44(2) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2006 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, முத்திரைக் கட்டண (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழான முத்திரைக் கட்டணம் தொடர்பில் நிதி, திட்டமிடல் அமைச்சரால் விதிக்கப்பட்டு, 2014 செத்தெம்பர் 30 ஆம் திகதிய, 1882/17 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2014.12.12 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 20.

மின்வலு, எரிசக்தி அமைச்சர்.— இலங்கை மின்சாரச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— 2009 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க, இலங்கை மின்சாரச் சட்டத்தின் 54 ஆம் பிரிவின் கீழ் மின்வலு, சக்தி அமைச்சரால் இலங்கைப் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் சிபாரிசுகளின் பேரில் மின்சார (அனுமதிப்பத்திரம் தொடர்பில் விண்ணப்பித்தலும் விலக்களிப்பும்) தொடர்பில் ஆக்கப்பட்டு, 2014 ஒற்றோபர் 10 ஆம் திகதிய, 1883/12 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2014.11.24 ஆம் திகதி சமர்ப்பிக்கப் பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 21.

சுற்றுலா மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர்,— தாவர விலங்கினப் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் கீழ் கட்டளை,— (469 ஆம் அத்தியாயமான) தாவர விலங்கினப் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ் கமநல சேவைகள், வனசீவராசிகள் அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2011 திசெம்பர் மாதம் 06 ஆந் திகதிய 1735/21 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2011.12.13 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

* 22.

ஆட்சியுரிமை (விசேட ஏற்பாடுகள்) சட்டமூலம் — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (2014, ஓகத்து 07) [1].

* 23.

சுரங்கங்கள், கனிப்பொருட்கள் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

24.

ஸ்ரீ லங்கா மகளிர் சம்மேளனம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை.

25.

தற்காப்புக் கலைகளுக்கான நிறுவகம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை.

26.

த இன்ஸ்ரிரியூட் ஒவ் சேர்டிபைட் பப்ளிக் எக்கவுன்டன்ஸ் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை.

27.

மெடிசினா ஓல்டனேடிவா நிறுவனம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை.

28.

உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல்கள் (திருத்தச்) சட்டமூலம் — பரிசீலனை.

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றன.

---

[1] “சட்டமூலம் இப்பொழுது இரண்டாம் முறையாக மதிப்பிடப்பெறுமாக” எனப் பிரேரணை கொண்டுவரப்பட்டு எடுத்தியம்பப்பெற்றது.